# பெரியாழ்வார் அருளிச் செய்த
# பெரியாழ்வார் திருமொழி
# முதல் பத்து

## முதல் திருமொழி - வண்ண மாடங்கள்
## கண்ணன் திருவவதாரச் சிறப்பு

** வண்ண மாடங்கள் சூழ் * திருக்கோட்டியூர் *
கண்ணன் கேசவன் * நம்பி பிறந்தினில் **
எண்ணெய் சுண்ணம் * எதிர் எதிர் தூவிட *
கண் நன்முற்றம் * கலந்து அளராயிற்றே 1

ஓடுவார் விழுவார் * உகந்தாலிப்பார் *
நாடுவார் நம்பிரான் * எங்குத்தான் என்பார் **
பாடுவார்களும் * பல்பறை கொட்ட நின்று *
ஆடுவார்களும் * ஆயிற்று ஆய்ப்பாடியே 2

பேணிச் சீருடைப் * பிள்ளை பிறந்தினில் *
காணத் தாம் புகுவார் * புக்குப் போதுவார் **
ஆணொப்பார் * இவன் நேரில்லை காண் * திரு
வோணத்தான் * உலகாளும் என்பார்களே 3

உறியை முற்றத்து * உருட்டி நின்றாடுவார் *
நறு நெய் பால் தயிர் * நன்றாகத் தூவுவார் *
செறிமென் கூந்தல் * அவிழத் திளைத்து * எங்கும்
அறிவழிந்தனர் * ஆய்ப்பாடி ஆயரே 4

கொண்ட தாள் உறி * கோலக் கொடு மழு *
தண்டினர் * பறியோலைச் சயனத்தர் **
விண்ட முல்லை * அரும்பன்ன பல்லினர் *
அண்டர் மிண்டிப் * புகுந்து நெய்யாடினார் 5

கையும் காலும் * நிமிர்த்துக் கடார நீர் *
பையவாட்டிப் * பசுஞ்சிறு மஞ்சளால் **
ஐய நா வழித்தாளுக்கு * அங்காந்திட *
வையம் ஏழும் கண்டாள் * பிள்ளை வாயுளே 6

வாயுள் வையகம் கண்ட * மட நல்லார் *
ஆயர் புத்திரன் அல்லன் * அருந்தெய்வம் **
பாய சீர் உடைப் * பண்புடைப் பாலகன் *
மாயன் என்று * மகிழ்ந்தனர் மாதரே 7

பத்து நாளும் கடந்த * இரண்டா நாள் *
எத்திசையும் * சய மரம் கோடித்து **
மத்த மாமலை * தாங்கிய மைந்தனை *
உத்தானம் செய்து * உகந்தனர் ஆயரே 8

கிடக்கில் தொட்டில் * கிழிய உதைத்திடும் *
எடுத்துக் கொள்ளில் * மருங்கை இறுத்திடும் **
ஒடுக்கிப் புல்கில் * உதரத்தே பாய்ந்திடும் *
மிடுக்கிலாமையால் * நான் மெலிந்தேன் நங்காய் 9

** செந்நெலார் வயல் சூழ் * திருக்கோட்டியூர் *
மன்னு நாரணன் * நம்பி பிறந்தமை **
மின்னு நூல் * விட்டுசித்தன் விரித்த * இப்
பன்னு பாடல் வல்லார்க்கு * இல்லை பாவமே 10

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

---